# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 179/மா/2022**
**நாள் : 19.11.2022**

திரு. K. ஜோதிலிங்கம்,
சென்னை– 97. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம், இந்திரா காந்தி தெரு, 3/358 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. ஜோதிலிங்கம் என்பவரின் 5.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 179/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம், இந்திரா காந்தி தெரு, 3/358 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. ஜோதிலிங்கம் என்பவரின் முறையீட்டு மனுவில்,

"I have sent a complaint to the said respondents, but no action was taken on my complaint so far.

Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you to take appropriate action against the respondents for not action taken on my complaint within the timeline.

There is illegal and unauthorised construction in progress at Plot No.73, Kumaran Kudil Anex, 3rd Cross Street, Mettukuppam, Chennai – 600 097 with ground plus two floors without proper frontage, exit, setback, etc., There is a practice these days of openly flouting the rules and regulations that are required to be adhered to according to law and therefore such behaviour has to be curbed, so kindly take appropriate action according to the law against the above said illegal and unauthorized construction for the violating of GCC/CMDA rules and regulations. Herewith I attached a photocopy of the illegal and unauthorized construction for your reference.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 14.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 2.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 14.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம், குமரன் குடில் இணைப்பு பிளாட் எண் 73 என்கின்ற இடத்தில் தரைதளம் மற்றும் 2 மாடிகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அக்கட்டடத்தின் முன்புறம் மாநகராட்சியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து Ramp அமைக்கப்பட்டிருந்தது. இம்முறை மன்றத்திற்கு என்னால் அனுப்பப்பட்ட புகார் மனுவையொட்டி மேற்கண்ட Ramp அகற்றப்பட்டு விட்டது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, எனது 7.10.2022 நாளிட்ட புகாரினை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனது புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என தெரிவித்து எனது 14.11.2022 நாளிட்ட கடிதத்தை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு அளித்துள்ள தனது 14.11.2022 நாளிட்ட கடிதத்தில் எனது "மனு தொடர்பான நடவடிக்கையில் மாநகராட்சி அதிகாரிகள் நான் கூறிய ஆக்கிரமிப்புகளை சரி செய்துவிட்டபடியால் அவர்கள் செய்த செயலால் திருப்தியடைந்தேன். ஆகையால் என் முறையீட்டு மனு மீது மேல் விசாரணை தேவையில்லை என இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்'' என குறிப்பிட்டுள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15—ன் செயற்பொறியாளர் 14.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்த பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, மேட்டுக்குப்பம், குமரன் குடில் இணைப்பு பிளாட் எண் 73 என்கின்ற இடத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு முன்புறம் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டிருந்த Ramp அகற்றப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தையும் மேலும் இது குறித்து மனுதாரருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரரது மனு மற்றும் வாக்குமூலம், எதிர் மனுதாரரான மண்டலம்-15ன் செயற் பொறியாளரது வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் தன்னுடைய 5.10.2022 நாளிட்ட புகார் மனுவில், மேட்டுகுப்பம், குமரன் குடில் இணைப்பு பிளாட் எண்.73 என்கின்ற இடத்தில் தரைதளம் மற்றும் 2 மாடிகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளதும், இக்கட்டடத்தின் முன்புறம் மாநகராட்சியின் இடத்தை ஆக்கிரமித்து Ramp அமைக்கப்பட்டுள்ளது எனவும் அதனை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 15ன் அலுவலருக்கு ஆணையிடுமாறு கோரியிருந்தார்.

புகார் மனுவில் குறிப்பிட்டிருந்தபடி மேற்கண்ட முகவரியில் மாநகராட்சியின் இடத்தில் அமைக்கப்பட்டு இருந்த Ramp அகற்றப்பட்டுவிட்டது எனவும், எனவே தன்னுடைய புகார் மனுவினை திரும்பப் பெற்றுகொள்ளுவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மண்டலம் -15ன் செயற்பொறியாளர் மேட்டுக்குப்பம் குமரன் குடில் இணைப்பு பிளாட் எண்.73 என்கின்ற இடத்தில் உள்ள வீட்டிற்கு முன்புறம் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டிருந்த Ramp அகற்றப்பட்டுவிட்டது எனவும், இது குறித்து மனுதாரருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுவிட்டது என, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-15ன் செயற்பொறியாளரின் வாக்குமூலத்தின் மூலம் அறியமுடிகிறது.

மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -15ன் செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

மனுதாரர் திரு. K. ஜோதிலிங்கம் 14.11.2022 அன்று இம்முறைமன்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மேட்டுக்குப்பம், குமரன் குடில் இணைப்பு பிளாட் எண்.73ல், அமைந்துள்ள கட்டிடத்தின் முன்பு மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்ட Ramp அகற்றப்பட்டதால், தன்னுடைய புகார் மனுவினை திரும்பப் பெற்றுக்கொள்ளவதாக தெரிவித்ததையும் மண்டல செயற்பொறியாளர் மேற்கண்ட இடத்தில் அமைக்கப்பட்டிருந்த Ramp அகற்றப்பட்டுவிட்டது என்பதையும் ஏற்று, மனுதாரரின் மனு மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. K. ஜோதிலிங்கம்,
   வழக்கறிஞர்,
   எண்.3/358, இந்திராகாந்தி தெரு,
   மேட்டுக்குப்பம், (OMR),
   சென்னை – 600 097.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, (OMR)
   சோழிங்கநல்லூர், சென்னை- 600 119.
5. துணை ஆணையர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, (OMR)
   சோழிங்கநல்லூர், சென்னை- 600 119.
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்**: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

22/11/22

செயலாளர்.